## கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**முன்னிலை: திரு.ஆ.எல்லப்பன்.எம்.ஏ., பி.எட்.,**

ஒமூ.மு.எண்.16939 / அ1 / 2024 நாள். .04.2025

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி - கடலூர் மாவட்டம் - கானூர் அரசு மேல்நிலைப் பள்ளி - திரு.கோ. ஆனந்தராஜ். என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை:
1. அரசாணை எண்.190/ பொதுப் பணிகள் - ஏ. நாள்.01.02.1962
2. அரசாணை நிலை எண். 151 பள்ளிக்கல்வி (SE1(1)த்துறை நாள். 09.09.2022
3. கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.12726/அ1/2023, நாள்.27.09.2023.
4. கானூர் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் கடித ந.க.எண்.200/2024 நாள்.12.11.2024.

*******

கடலூர் மாவட்டம், கானூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.கோ.ஆனந்தராஜ் என்பாருக்கு பார்வை 4 இல் கண்டுள்ள கடிதத்தின்படி பணியில் சேர்ந்த நாளான 29.09.2023 முற்மபகல் முதல் பணிவரன்முறை செய்ய கோரும் கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளது.

கானூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.கோ.ஆனந்தராஜ் என்பாருக்கு 29.09.2023 முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில்இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

- தனியர் பணிவ்ரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார்.
- தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியிலும் தேர்ச்சி பெற வேண்டும் .
- தனியரின் தகுதிகாண்பருவம் அதிகப்படியாக ஐந்து ஆண்டுகள் மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத்தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினாலும் பவானிசாகர் அடிப்படைப்ப பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாகக் காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும். நேர்வுகளில் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள் ) சட்டம் 2016 பிரிவு 33(4) இன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : பணிப்பதிவேடு (1தொகுதி)

முதன்மைக்கல்வி அலுவலர்
கடலூர்

பெறுதல்
திரு.கோ.ஆனந்தராஜ்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, கானூர். (உரிய வழியாக)

நகல்- தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கானூர்